# தமிழ் இலக்கியங்களில் காலந்தோறும் மானுட விழுமியங்களும் கலைக்கூறுகளும்

தொகுதி – III




பதிப்பாசிரியர்கள்

முனைவர் க. முருகேசன்

முனைவர் ஆர். மோகனதாஸ்

முனைவர் சி. மகாலட்சுமி

# தமிழ் இலக்கியங்களில் காலந்தோறும் மானுட விழுமியங்களும் கலைக்கூறுகளும்

**(பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)**


| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர்கள் | : | **முனைவர் க. முருகேசன்**<br>**முனைவர் ஆர். மோகனதாஸ்**<br>**முனைவர் சி. மகாலட்சுமி** |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர்கள் |
| முதற்பதிப்பு | : | டிசம்பர், 2015 |
| வெளியீடு | : | **தமிழ்த்துறை**<br>**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி**<br>கோயம்புத்தூர் - 641029. |
| கணினி | : | பிரடாக் பிரிண்ட், கோயம்புத்தூர் - 29. |
| அச்சாக்கம் | : | பிரடாக் பிரிண்ட்,<br>476/1 பூமாதேவி கோவில் அருகில்<br>கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)<br>கோயம்புத்தூர் - 29.<br>அலைபேசி : 98432 73994, 91505 91017 |
| பக்கங்கள் | : | VIII + 1137 - 1628 |
| விலை | : | உரூ. 350/- |

**ISBN : 978 - 93 - 80800 - 60 - 8**


# International Conference on Elements of Arts and Human Values in Tamil Literature


| | | |
|---|---|---|
| Editor's | : | **Dr. K. Murugesan. Dr. R. Mohanadass**<br>**Dr. C. Mahalakshmi** |
| Copyright's | : | Editors |
| First Edition | : | December, 2015 |
| Published | : | **Department of Tamil**<br>**Kongunadu Arts and Science College**<br>Coimbatore - 641 029. |
| Computer | : | **Prdag Print**, Coimbatore - 29. |
| Printing at | : | **Prdag Print**<br>476/1, Near Boomadevi Kovil<br>G.N. Mills (Po), Coimbatore - 29.<br>Cell : 98432 73994, 91505 91017 |
| Pages | : | VIII + 1137 - 1628 |
| Prize | : | **Rs. 350/-** |

257. **நா. கருணாம்பிகா** *1215*
தாயுமானவர் உணர்த்தும் வாழ்வியல் நெறிகள்

258. **முனைவர் பொ.மா. பழனிசாமி** *1219*
சங்க இலக்கியத்தில் கலைக் கூறுகள்

259. **தளவை கவிஞர் கோ. கலைச்செல்வன்** *1224*
தமிழ் இலக்கியங்களில் கலைகள் நேற்றும் - இன்றும்

260. **முனைவர் இரா. மணிமேகலை** *1229*
நெஞ்சுவிடு தூது

261. **லெ. கமலா** *1234*
திருமந்திரத்தில் மானுட விழுமியங்கள்

262. **முனைவர் ம. கீதா** *1239*
ஔவையார் பாடல்களில் வாழ்வியல் நெறிகள்

263. **முனைவர் சு. சதீஷ்குமார்** *1244*
தேவார மூவர் மொழிந்த அறநெறி விழுமியங்கள்

264. **முனைவர் பொ. அமுதா** *1250*
நாட்டுப்புறப் பாடல்களில் உழைப்போர் நிலையும் உரிமைக் குரலும்

265. **மு. முனீஸ் மூர்த்தி** *1254*
பழந்தமிழ் நூற்பதிப்பில் நிகழ்ந்துள்ள நூல் கொடுக்கல் - வாங்கல் பண்பாடு

266. **மு. சம்பூரணம்** *1258*
அறுபத்து மூவருள் மூவர் (திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர்)

267. **கவிஞர் உதயநிலவு அ. நிஜாம்** *1263*
சிலப்பதிகாரத்தில் ஆடல் ஆசான்

268. **என். சுப்பிரமணியன்** *1268*
மனித விழுமியங்களில் புனித நன்னீராடல் தீர்த்த யாத்திரை

269. **முனைவர் கு.ச. ஜெயஸ்ரீ** *1273*
முல்லை நிலத்து மானுடவியல் விழுமியங்கள்

270. **முனைவர் ச. சிவகாமிசுந்தரி** *1278*
வள்ளலார்: சூழலும் விழுமியங்களும்

271. **க. சந்திரசேகரன்** *1281*
கோயிற் கலைகளும் சமயங்களும்

272. **சீ. குமார்** *1285*
நாலடியார் வெளிப்படுத்தும் மானுட விழுமியங்கள்

273. **எம். தனசேகரன்** *1290*
வாஸ்து சாஸ்திரத்தின் உண்மைநிலை வாஸ்து சாஸ்திரமும் ஜோதிடமும்

# 260. நெஞ்சுவிடு தூது

**முனைவர் இரா. மணிமேகலை**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
கொங்குநாடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர் - 641 029.

## தூதிலக்கியம்

தூது இலக்கியம் மிகத் தொன்மையான இலக்கிய வகைமைகளில் ஒன்றாகும். பிற்காலத்தில் சிற்றிலக்கிய வகைகளில் ஒன்றாக வைத்து எண்ணப்பட்டாலும் தொல்காப்பிய காலத்திலிருந்தே இவ்விலக்கியம் கிளைத்து வளர்ந்தற்கான காரணிகள் தென்படுகின்றன. தொல்காப்பியம் அகத்திணையில் காதல் தூதினைக் குறிக்க "**வாயில்**" என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார். ஆயினும் அஃறிணைப் பொருள்களைத் தூதாக அனுப்பும் மரபினைத் தொல்காப்பியம் கூறவில்லை. எனினும் "**காமம் மிக்க கழிபடர் கிளவி**" எனும் நிலையில் அஃறிணைத் தூதினை அடக்குவார். அதுவே தூதிலக்கியம் எனும் பெரும் இலக்கிய வகைமை தோன்றுவதற்கான அடித்தளத்தை இட்டது.

> ***"சொல்லா மரபின் அவற்றொடு கெழீஇச்***
> ***செய்யா மரபின் தொழிற்படுத்து அடக்கியும்"***

என்று பொருளியலில் கூறுகின்றார். எனவே பிற்காலத்தில் அகத்தூது, புறத்தூது என்று பிரித்துப் பேசினாலும் தொல்காப்பியக் காலகட்டத்தில் அரசியல், போர் போன்றவற்றிற்கு "**தூது**" என்ற சொல் கையாளப் படுகின்றது. காதல் தூதிற்கு "**வாயில்**" எனும் சொல் குறிக்கப் படுகின்றது.

> ***"தோழி தாயே பார்ப்பான் பாங்கன்***
> ***பாணன் பாடினி இளையர் விருந்தினர்***
> ***கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்***
> ***யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப"***

என்று பன்னிருவரைச் சுட்டுகிறார். இதில் அஃறிணைப் பொருள்களை வாயில்களாகச் சுட்டவில்லை என்பது குறிக்கத்தக்கது.

சங்கப் பாடல்களில் நற்றிணைத் தலைவி, கிளியினைத் தூதாக (பா.எ.102) விடுவதினைக் காண முடிகிறது. அகநானூற்றுத் தலைவி கூற்றுப் பாடலில்(பா.எ.170) நண்டினைத் தூது அனுப்புகிறாள் தலைவி. ஐங்குறுநூறு பாடல் 317- ல் தலைவி நெஞ்சினைத் தூது விடுகிறாள். புறத்தூதாக ஔவைப்பெருமாட்டி அதியமானால் தொண்டைமானிடம் தூது அனுப்பப்படுவதையும் அவர் அப்பணியை மிகச் சிறப்பாக நிறைவேற்றியதையும் புறநானூறு கூறுகின்றது. மேலும் திருக்குறளில் புறத்தூதுக்குரிய இலக்கணத்தை "**தூது**" என்ற அதிகாரம் மூலம் வள்ளுவர் நன்கு விளக்கிச் செல்கிறார். உரை